பக்கங்கள் 15
# மாலை முரசு
முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை 10.10.2023 அதிர்வு 71

## கொட்டாஞ்சேனையில் இளைஞர் படுகொலை

கையடக்கத் தொலைபேசி தொடர்பில் ஏற்பட்ட தகராறில் 24 வயதுடைய இளைஞர் ஒருவர் மார்பில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04▶



# வருகின்றார் ஜெய்சங்கர்

## திருமலைக்கும் செல்வார்

கொழும்பு, ஒக்டோபர் 10

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொள்ளும் 'இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின்' மாநாட்டில் கலந்துகொள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இலங்கை வருகின்றார். அவர் திருகோணமலைக்கும் செல்கின்றார்.

எனினும், தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளை அவர் இம்முறை சந்திப்பாரா என்பது தெரியவரவில்லை.

மாநாடு நாளை புதன்கிழமை கொழும்பில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இன்று இரவு அல்லது நாளை முற்பகல் வேளையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை வரவுள்ளார். 04▶

## மோ. சைக்கிள் விபத்தில் தாய் சாவு; மகன் காயம்!

### வவுனியா - மன்னார் வீதியில் சம்பவம்



-கே.வசந்தரூபன்-

வவுனியா – மன்னார் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தாய் பலியாகியுள்ளார் என்றும், மகன் படுகாயமடைந்துள்ளார் என்றும் பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். 04▶

## இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலில் இலங்கைப் பெண் சுட்டுக்கொலை

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் நடைபெற்றுவரும் மோதலில் நேற்று காணாமல்போனார் என்று கூறப்பட்ட இலங்கைப் பெண் உயிரிழந்துள்ளார 04▶

## நஸீர் அஹமட்டின் பதவி வெற்றிடம் என அறிவிப்பு



முன்னாள் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டின் எம்.பி. பதவி வெற்றிடமாகியுள்ளது என்று நாடாளுமன்றத்தின் பொதுச் செயலாளர் 04▶

# வவுனியாவில் கோர விபத்து




## பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இருவர் உயிரிழப்பு; அறுவர் படுகாயம்

- கே.வசந்தரூபன் -

வவுனியா – வெளிக்குளம் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, மடுகந்தை பகுதியில் 04▶







# சீனக் கப்பல் நவம்பரில் வரவே அனுமதி என்கிறார் அலி சப்ரி!

சீன கப்பல் 'ஷியான் – 06' நவம்பர் மாதத்திலேயே இலங்கைக்கு வருகை தருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்வொன்றில் இதனை தெரிவித்துள்ள அவர் சீனக் கப்பல் இலங்கை துறைமுகத்திற்கு வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது. எனினும் கப்பல் ஒக்டோபர் மாதத் தில் இலங்கைக்கு வரமுடியாது. ஆனால் நவம்பர் மாதத்திலேயே சீன கப்பல் இலங்கை வரமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.



சீனக் கப்பல் நவம்பர் மாதத்திலேயே இலங்கை வரமுடியும் என்பது குறித்து அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டை கொண்டுள்ளது எனவும் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இது வெறுமனே ஒரு விஜயம் மாத் திரம் இல்லை கப்பல் இலங்கையில் தரித்து நிற்கும் நாள்களில் அதற்கான அனைத்து வசதிகளையும் இலங்கை வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், உள்விவ காரங்களை கருத்தில் கொண்ட பின்னர் கப்பல் இலங்கை துறைமுகத்திற்கு வருவதற்கான திகதியை வழங்கியுள் ளோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு சீனாவுடனான இரு தரப்பு உறவுகள் மிகவும் அவசியமா னவை என்பதையும் அவர் வலியுறுத் தியுள்ளார்.

# இம்மாதமே கப்பல் இங்கு வரும் என சீனா அழுங்குப் பிடி வரவேற்புக்கு அழைப்பிதழையும் அனுப்பத் தொடங்கியது!

**(என்.புவியரசன்)**

சினாவின் 'ஷியான் 06' கப்பல் இந்த மாதத்தில் இலங்கை வருமா வராதா என்ற சர்ச்சையின் மத்தியில் இம்மாதத்தில் (26 ஆம் திகதியன்று) அக்கப்பலைக் கொழும்புத் துறைமுகத் தில் வரவேற்று, அதில் ஏறி பார்வையி டும் பொது நிகழ்வில் கலந்து கொள் வதற்கான அழைப்பிதழை சீனத் தூதரகம் விநியோகித்து வருகின் றது.

சினாவின் 'ஷியான் 06' கப்பல் இலங்கைத் துறைமுகத்திற்கு நவம் பரில் வருவதற்கான அனுமதியே வழங்கப்பட்டுள்ளது என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கூறினாலும் இம்மாதம் திட்டமிட்ட திகதியில் கப்பலை கொண்டுவருவதில் சீனா உறுதியாகவே இருந்து வருகின்றது என்பது இந்த அழைப்பிதழ் விநியோகத்தின் மூலம் தெரிகின்றது.

சீனாவில் இருந்து கப்பல் புறப்பட்டு இந்தியாவின் கிழக்கு திசையில் ஆழ் கடலில் ஒரு மாதம் ஆய்வு செய்து முடித்து விட்டு, தற்போது உணவு, தண் ணீர் நிரப்பலுக்காகவும் இலங்கையுட னான ஆய்வுப் பணிக்காகவும் இலங்கை நோக்கிப் புறப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 25ஆம் திகதி வருவதற் காக அனுமதி கோரப்பட்டபோதும் நவம்பர் 25ஆம் திகதி வருமாறு இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

இவற்றின் மத்தியிலும் ஒக்டோபர் 25ஆம் திகதி வரும் கப்பலில் இலங்கை ஆய்வாளர்கள் அல்லது விஞ்ஞானிகள் நால்வரை ஏற்றி 10 நாள் ஆய்வில் ஈடுபட்ட பின்பு, மீண்டும் துறைமுகம் வந்து ஏற்றிய இலங்கை யரை இறக்கிய பின்பு கப்பல் இலங்கை யில் இருந்து வெளியேறும் என்று கூறப்பட்டது.

கப்பலை வரவேற்று, ஆய்வு ஆரம் பப் பணியில் கலந்துகொள்ளுமாறு முக்கிய பிரமுகர்களுக்கு சீனாவின் தென் சீனக் கடல் ஆய்வு நிறுவனம், சீன அறிவியல் அக்கடமி கடிதத் தலைப்பில் இந்த அழைப்புக்களை அனுப்பியுள்ளது.

# சிறுபோக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி

இம்முறை சிறுபோகத்தில் பயிர்ச்செய்கை பாதிப்பை எதிர்நோக்கிய 53 ஆயிரத்து 965 விவசாயிகளுக்கு இழப்பீட்டை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வறட்சியான வானிலையினால் இம்முறை சிறுபோகத்தில் 58 ஆயிரம் 770 ஏக்கர் நெல் மற்றும் ஏனைய போகப்பயிர்கள் அழிவடைந்தன.

இதன்காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற் காக விவசாய அமைச்சர் அமைச்சரவை பத்திரமொன்றை முன்வைத்திருந்தார்.

அதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# விசாரணைப் பொறிக்குள் சிக்கிய பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி

## உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்



பருத்தித்துறை பொலிஸ் அதிகாரி தொடர்பான விசாரணை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றது என யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான கூட்டத்தின்போது பருத்தித்துறையில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் வடமராட்சி கிழக்கில் களவாக மணல் ஏற்றுபவர்களுக்கு ஒத்துழைக்காவிட்டால் கஞ்சா வழக்கு போடுவேன் என அச்சுறுத்தல் விடுக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அது தொடர்பில் உரிய விசாரணை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றது எனவும், விசாரணை முடிவுற்றதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

# தேர்தலைப் பிற்போடும் திட்டம் அரசுக்கு இல்லை

## மொட்டு எம்.பி. சந்திரசேன தெரிவிப்பு



எந்தத் தேர்தலையும் பிற்போட அரசு முயற்சிக்கவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை. காரணத்தின் அடிப்படையிலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டது.

அடுத்த தேர்தலிலும் நாம்தான் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிப்போம் என உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

நாட்டில் புல் சாப்பிடும் மக்கள் இல்லை சோறு சாப்பிடும் மக்கள்தான் உள்ளனர். எதிரணிகளின் அரசியல் நாடகம் மக்களுக்குத் தெளிவாக புரியும்.

கிராம மட்டத்தில் தற்போது கூட்டங்களை நடத்தி வருகின்றோம். எமது பலம் என்னவென்பதை ஜே.வி.பியினர் அங்கு வந்து பார்க்கலாம்." - என்றார்.

# ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு இளைஞர்கள் கைது

## பொகவந்தலாவ பகுதியில் இன்று சம்பவம்

(செ.தி.பெருமாள்)

ஐஸ் போதைப்பொருளைத் தம்வசம் வைத்திருந்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், இளைஞர்கள் இருவர் இன்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இருவரும் பெற்றசோ தோட்டத்தைச் சேர்ந்த 22 மற்றும் 25 வயது உடையவர்கள் என்பதும், அவ்விருவரும் கொழும்பில் வேலைச் செய்பவர்கள் என்பதும், விடுமுறையை எடுத்துக்கொண்டு வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர் என்பதும் விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பெற்றசோ தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து இவ்விரு இளைஞர்களையும் சோதனைக்கு உட்படுத்திய போது, அவ்விருவரிடமும் தலா 5 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் பொதிச்செய்யப்பட்டு இருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இவ்விரு இளைஞர்களையும் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பெருமாள் கோவிலின் புனரமைப்புக்கு இரண்டு லட்சம் ரூபா வழங்கிய யாசகர்



யாழில் உள்ள ஆலயம் ஒன்றில் யாகசம் பெறும் ஒருவர் அந்த ஆலயப் புனரமைப்புப் பணிக்கு இரண்டு லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

யாழ் வண்ணை ஸ்ரீ வேங்கடவரதராஜப்பெருமாள் கோவிலில் கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக யாகாசம் பெறும் பாபுஜி என்ற நபரே ஆலயப் புனரமைப்புக்கு என இந்த நிதியை வழங்கியுள்ளார்.

இந்த விடயம் தற்போது சமூக ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது.

ஆலயத்தில் யாகாசம் பெறும் பணத்தைத் தனது உணவுச் செலவுக்குப் போக ஏனையவற்றை சேமித்து வைத்தே ஆலய புனரமைப்புக்கு என சுமார் இரண்டு லட்சம் ரூபா பணத்தை ஆலய நிர்வாகத்திடம் வழங்கியுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இஸ்ரேல் - பாலஸ்தீன...

எனச் சந்தேகிக்கப்படுகின்றது என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

சமூக ஊடகங்களில் கிடைத்த தகவலின் அடிப்படையில் அந்தப் பெண் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹாவைச் சேர்ந்த 49 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

அவர் 2022 ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக இஸ்ரேலுக்குத் தாதியாகப் பணிபுரியச் சென்றுள்ளார்.

இஸ்ரேலின் தற்போதைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, இராஜதந்திர தலையீட்டின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை இலங்கைக்குக் கொண்டு வர முடியும் என நம்புவதாகவும் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திடம் இருந்து அவருக்கு வழங்க வேண்டிய அனைத்து காப்பீடு மற்றும் இழப்பீட்டுத் தொகையை வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## நஸர் அஹமட்டின்...

குஷானி ரோஹணதீர தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

இதன்படி, அந்த வெற்றிடத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பட்டியலில் அடுத்த வேட்பாளரை தேர்தல்கள் ஆணைக்குழு நியமிக்கவுள்ளது.

நஸீர் அஹமட்க்கு அடுத்தபடியாக இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா ஆவார்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர் நியமனம் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்புரிமையிலிருந்து நீக்கியமை சட்ட ரீதியானது என கடந்த 6ஆம் திகதி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

அதன்மூலம் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## கொட்டாஞ்சேனையில்...

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொட்டாஞ்சேனை, ஸ்ரீ குணானந்த மாவத்தையைச் சேர்ந்த யோரம் ஹரியம் என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கைத்தொலைபேசி தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதம் இறுதியில் கொலையில் நிறைவடைந்துள்ளது என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் கொட்டாஞ்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலையாளி அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், அவர் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## மோ. சைக்கிள்...

வவுனியா – மன்னார் வீதியில் பம்பைமடு இராணுவ முகாமுக்கு அருகில் இன்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா, குருக்கள்புதுக்குளத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள்

பம்பைமடு இராணுவ முகாமுக்கு அருகில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் வி.ஜெயந்தினி (வயது 45) என்பவர் பலியாகியுள்ளார். அவரின் மகன் விஜயரட்ணம் சிவரோஜன் (வயது 22) படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணை பூவரசங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## வருகின்றார் ஜெய்சங்கர்...

மேற்படி இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின் 2023 - 2025 காலப்பகுதிக்கான தலைமைப் பதவியை இலங்கை வகிப்பதால் இம்முறை இந்த மாநாடு இலங்கையில் இடம்பெறுகின்றது.

கடந்த ஆண்டு மாநாடு பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெற்றது.

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்துவரும் பின்புலத்தில் 'இந்து சமுத்திர எல்லை நாடுகள்' மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளது. இது சர்வதேச ரீதியில் பெரும் அவதானம் மிக்க மாநாடாக மாறியுள்ளது.

பிராந்தியத்தில் பலம் வாய்ந்த நாடான இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் பங்கேற்கவுள்ளார்.

இந்த விஜயத்தின் ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உட்பட அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்களுடன் எஸ்.ஜெய்சங்கர் சந்திப்புக்களை நடத்தவும் உள்ளார்.

அரசாங்கத்தின் சீன சார்பு கொள்கை காரணமாக இந்தியா சில அரசியல் நெருக்கடிகளை இலங்கைக்குக் கொடுத்து வருகின்றது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த மாதம் 2ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய இருந்த நிலையில், கடைசி நிமிடத்தில் தவிர்க்க முடியாத காரணத்தால் ராஜ் நாத் சிங்கின் இலங்கை பயணம் ஒத்திவைக்கப்பட்டதாக இந்திய வெளியுறவுச் செயலகம் அறிவித்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெயசங்கர் இலங்கையில் 'இந்து சமுத்திர எல்லை நாடுகள்' மாநாட்டில் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, எஸ்.ஜெய்சங்கர் தமது இலங்கை விஜயத்தில் திருகோணமலைக்கும் செல்லவுள்ளார். அங்கு இந்திய நிதி உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள சில திட்டங்களை அவர் பயனாளிகளுக்கு கையளிக்கவுள்ளார்.

திருகோணமலையில் இந்தியா முன்னெடுக்கவுள்ள ஏனையத் திட்டங்கள் குறித்தும் அவர் ஆய்வுகளை நடத்துவார் என அறியமுடிகின்றது.

## வவுனியாவில் கோர விபத்து

உள்ள பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமில் இருந்து வவுனியா நகர் நோக்கிப் பயணித்த ஜீப் ரக வாகனம், வெளிக்குளம் பகுதியில் பயணிக்கும்போது வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோதி கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த வீட்டு மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்பாதுஜீப்வாகனத்தில்பயணித்த பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 6 பேரும் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பாலிஸார் மேற்காண்டு வருகின்றனர்.






## ஜனாதிபதித் தேர்தலில்

# ‘மொட்டு’வின் வேட்பாளரே வெற்றிவாகை சூடுவாராம்

## இப்படி நம்புகின்றார் மஹிந்த



அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன களமிறக்கும் வேட்பாளரே வெற்றியடைவார் என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

யார் அந்த வேட்பாளர் என்று உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வீழ்ந்து போகவில்லை. எமது கட்சி இன்னமும் வீரியத்துடன் இருக்கின்றது. ஆனால், கட்சியின் தலைமைத்துவத்தில் நிச்சயம் மாற்றம் வரும். எந்நாளும் எம்மால் அப்பதவியில் இருக்க முடியாது. புதியவர்கள் மற்றும் இளைஞர்கள் தலைமையேற்க முன்வர வேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. உரிய நேரத்தில் அறிவிப்பு விடுக்கப்படும். எமது கட்சி களமிறக்கும் வேட்பாளரே வெற்றியடைவார்.அதேவேளை, சர்வதேச நாணய நிதியம் கூறுவது போல்தான் இந்த அரசு செயற்பட வேண்டும் என்றில்லை. மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.” – என்றார்.



# குடிசன, வீட்டு வசதிகள் கணக்கெடுப்புக்கான தேசிய மட்டப் பூர்வாங்கப் பணி தொடங்கியது

**(எஸ்.கீதபொன்கலன்)**

இலங்கையின் ‘குடிசன,வீட்டு வசதிகள் தொகை மதிப்பு-202’ கணக்கெடுப்புக்கான தேசிய மட்ட செயற்பாடுகள் நேற்று திங்களன்று திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வைத்து ,தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.எம்.பி.அநுர குமாரவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு இறுதியாக தீவடங்கலாக குடிசன கணப்பெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. 12 வருடங்களின் பின் 2024 ஆம் ஆண்டு இந்தக் கணக்கெடுப்பு நடைபெறுகின்றது.



திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி. பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன் மற்றும் புள்ளி விவரத் திணைக்களத்தின் அலுவலர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இம்முறை வழமையான படிவங்களை பயன்படுத்தி கணக்கெடுப்பு நடாத்தப்படமாட்டாது. பதிலாக ‘டப்’ கருவிகள் மூலமே கணக்கெடுப்பு நாடு முழுவதும் நடைபெறவுள்ளது என்று புள்ளிவிவரத்திணைக்கள பணிப்பாளர் நாயகம் கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தலுக்கு நிரந்தர ஆப்பு?

'பாம்பின் கால் பாம்பறியும்'- என்பார்கள்.

அதுபோல ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வு எத்தகையது என்பது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு நன்கு தெரியும். முழு நேர அரசியலுக்குள் சஜித் பிரேமதாஸஇறங்கிய காலம் முதல் - அவர் தந்தையார் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொல்லப்பட்ட காலம் தொடக்கம் - கால் நூற்றாண்டு காலத்துக்கு மேல் ரணில் விக்கிரமசிங்க தலைமை வகித்த ஐக்கிய தேசியக் கட்சியில் தான் சஜித் பிரேமதாஸவும் குப்பை கொட்டிக் கொண்டிருந்தார். அவர் கட்சித் தலைவர் என்றால் இவர் நீண்ட காலம் பிரதித் தலைவராகவும் இருந்திருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் நகர்வு எல்லாம் எத்தகையவை என்பது சஜித்துக்கு அத்துபடி. அதனால்தான் ரணிலின் அரசியல் சதித் திட்டம் ஒன்று குறித்து முற்கூட்டியே எச்சரிக்க சஜித்தினால் முடிந்திருக்கின்றது என்று கூறலாம்.

தேர்தல் முறைமையை மாற்றி அமைத்தல் என்ற பெயரில் இனி நடக்க வேண்டிய தேர்தல்களை நடத்தாமல் காலம் தள்ளுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் காய் நகர்த்துகின்றார் என்ற என்று சஜித் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். அவர் சொல்வது சரிதான்.

இருக்கின்ற தேர்தல் முறைகளை ஆறு மாதங்களிலோ, ஒரு வருடத்திலோ மாற்றி அமைப்போம் என்று முதலில் உறுதி தருவார். அதைக் காட்டி நடைமுறையில் இருக்கும் தேர்தல் சட்டங்களை ரத்து செய்யும் சட்டப் பிரேரணைகளை நிறைவேற்றுவார். ஆனால் புதிய தேர்தல் சட்டங்களை உரிய காலத்தில் கொண்டு வர மாட்டார். உறுதியளித்த காலத்தில் என்று இல்லை, பின் எந்தக் காலத்திலும் கொண்டுவர மாட்டார். நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையே இந்த விவகாரத்தில் ஒற்றுமைப்பாடு - இணக்கம் - இல்லை என்பார். அதனால் புதிய தேர்தல் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை என்று சாக்குப் போக்குக் கூறி கைவிரிப்பார். அதன் மூலம் மக்கள் பிரதிநிதிகளை இல்லாமல் செய்து, அந்த அவைகளின் அதிகாரங்களை அவரே பிரயோகிப்பார்.

இது ஒன்றும் ரணில் புதிய உத்தி அல்ல. நாடு முழுவதிலும் மாகாண சபை தேர்தல்களை ஆறு, ஏழு ஆண்டுகளாக நடத்த முடியாத நிலையை இப்படித்தான் கொண்டு வந்தார் அவர்.

நாடாளுமன்றத் தேர்தல் விடயத்திலும், ஜனாதிபதித் தேர்தல் விடயத்திலும் கூட இத்தகைய தந்திரோபாய சதித் திட்டங்களை அவர் கட்டவிழ்க்கக் கூடும் என்பது தான் சஜித் பிரேமதாஸவின் எச்சரிக்கையில் பொதிந்து கிடக்கும் விடயம்.

பொதுத்தேர்தலையும் தொகுதிவாரி, மாகாண வாரி, தேசியப் பட்டியல் வாரி என்று முத்தரப்புக் கலப்பு முறையில் முன்னெடுக்கும் சட்டத் திருத்த யோசனை ஒன்று குறித்து ஆளும் தரப்பில் இருந்து கசிய விடப்பட்டிருக்கும் அறிவிப்பு, தேர்தலை நடத்தாமல் தள்ளிப்போட்டு, அதிகாரங்களைத் தானே தொடர்ந்தும் பிரயோகிக்கும் ரணிலின் சதி நாசத் திட்டத்தின் ஒரு பகுதிதான்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எச்சரித்தமை போல நாட்டு மக்கள் மக்கள் விழிப்போடு இருப்பது நல்லது.

## விமானத்துறைக்கு 8 மாதங்களில் 2,200 கோடி ரூபா இலாபமாம்!

### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



சேவை வழங்கல் ஊடாக நாட்டின் விமானத்துறை கடந்த ஜனவரி மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில், 2 ஆயிரத்து 200 கோடி ரூபாவை இலாபமாக ஈட்டியுள்ளது என துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இலாபத்தில் சுமார் ஆயிரம் கோடி ரூபா திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது. பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 200 விமானப் போக்குவரத்து சேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகள் காரணமாக விமான சேவைகள் பல சிரமங்களை எதிர்கொண்டிருந்தன.

கொவிட் தொற்றுநோய் காரணமாக, விமான சேவை நிறுத்தப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் வருகையும் குறைவாகவே காணப்பட்டது. டொலர் நெருக்கடியால் முழு விமானப் போக்குவரத்துத் துறையும் பெரும் நெருக்கடியைச் சந்தித்தது.

எவ்வாறாயினும், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நவீன தொழில்நுட்பத்துடன் அபிவிருத்தி செய்ததன் காரணமாக, தென்கிழக்கு ஆசியாவின் சிறந்த விமான நிலையங்களில் ஒன்றாக இதனை, சர்வதேச விமானப் போக்குவரத்து அதிகாரசபை பெயரிட்டுள்ளது.

பண்டாரநாயக்க விமான நிலையம் கடந்த ஒகஸ்ட் மாதம் 6 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான பயணிகளுக்கு சேவைகளை வழங்கியுள்ளது.

விமான சேவைகளை வழங்குவதன் மூலம் இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் 22 பில்லியன் ரூபா இலாபத்தை ஈட்ட முடிந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

## ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சீ.டி. ஸ்கான் சேவை முற்றாக பாதிப்பு!

பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் சீ.டி. ஸ்கான் சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள ஒரேயொரு சீ.டி. ஸ்கான் இயந்திரமும் பழுதடைந்ததன் காரணமாக அந்த சேவைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுனர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வருடாந்த சேவை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படாமையால், அந்த இயந்திரத்தை சீர்செய்வதில் பாரிய பிரச்சினை காணப்படுகிறது என அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை சிறுவர்களுக்கான சிறப்பு மருத்துவமனையாக காணப்படுகின்றது.

இலங்கையில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து இந்த வைத்தியசாலைக்கு பல சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் சிகிச்சைகளுக்காக மாற்றப்படுகின்றனர்.

சி.டி.ஸ்கான் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், தற்போது சிகிச்சையளிப்பதற்கு பாரிய அசௌகரியம் ஏற்பட்டுள்ளது என அரச கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இதற்கான உரிய தீர்வு விரைவில் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு நடைபவனி இன்று

யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நடைபவனி இன்று சிறப்புற இடம்பெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழாவின் ஓர் அங்கமான நடைபவனி நல்லூரில் அமைந்துள்ள நல்லை ஆதீன வாயிலிருந்து இன்று காலை ஆரம்பமானது.

நல்லை திருஞானசம்மந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுடன் ஆரம்பமான நடைபவனி, நல்லூர் கந்தன் ஆலயத்தின் முன்றலைச் சென்றடைந்து, அங்கிருந்து பருத்தித்துறை வீதி வழியாக முத்திரைச்சந்தி, கல்வியங்காடு, கட்டைப்பிராய் ஊடாக இருபாலை சந்தியைச் சென்றடைந்தது.

அங்கிருந்து தொடர்ந்த பேரணி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நிறைவடைந்தது.

நடைபவனியின் சிறப்பம்சமாக கலாசாலையின் பழையமாணவர்களினால் தயாரிக்கப்பட்ட கலாசாலையினை பிரதிபலிக்கும் ஊர்தி பவனியும் இடம்பெற்றது.

ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நடைபவனியில் கலாசாலையின் பிரதி அதிபர், உப அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், கல்விசாரா பணியாளர்கள், கலாசாலையில் பயிற்சிபெற்று இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமிருந்து வருகைதந்த பழையமாணவர்கள் ஆகியோருடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களும் விரிவுரையாளர்களும் பங்குகொண்டிருந்தனர்.














# மாலதியின் நினைவு நாள் முல்லையில் அனுஷ்டிப்பு

முதலாவது பெண் மாவீரர் மாலதியின் 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றையதினம் முல்லைத் தீவில் ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் அஞ்சலியுடன் இடம்பெற்றன.

விடுதலைப் போரில் உயிர்நீத்த முதல் பெண் மாவீரர் மாலதியின் 36ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் நினைவு கூரப்பட்டுள்ளது.

இதன் போது சுடர் ஏற்றப்பட்டு, கூடியிருந்தோர் மாவீரர் மாலதியின் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

சமூக செயற்பாட்டாளர் சகீலா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.தவராசா, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கெங்காதரன், சமூக செயற்பாட்டாளர்களான ஜுட்சன், பீற்றர் இளஞ்செழியன் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# அம்பாறையில் நேற்று கவிதை நூல் வெளியீடு

(எம்.எவ்.நவாஸ்)

ஊடகவியலாளரும் எழுத்தாளருமான கவிஞர் முழுமதி எம். முர்தலா எழுதிய 'மழையாகி வெயிலாகிறேன்' எனும் தலைப்பிலான கவிதை நூல் வெளியீட்டு விழா அம் பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா எஸ். இஸ்ஸடீன் தலைமையில் அக் கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ எல். தவம், அம் பாறை மாவட்ட கலாசார உத்தியோத்தர் ஏ எல். தௌபீக் மற்றும் அரசியல் பிர முகர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.





# 3 மாவட்டங்களுக்கான மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை நீடிப்பு

தொடரும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக 3 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

காலி, மாத்தறை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களின் சில பிரதேச செயலகங்கள் இதில் உள்ளடங்குகின்றன.

காலி மாவட்டத்தின் யக்கமுல்ல, எல்பிட்டிய, நாகொட, இமதுவ, காலி கடவத் சதர பிரதேச செயலக பிரிவுகள், களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, வலல்லாவிட்ட, மத்துகம பிரதேச செயலக பிரிவுகள், மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர, அக்குரஸ்ஸ, ஹக்மன ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கே இவ்வாறு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பதுளை, கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# உலக உளநல தினத்தினை முன்னிட்டு கல்முனை பணிமனையில் செயலமர்வு

(நூருல் /ஹுதா உமர்)

இன்று உளநல தினமாகும். இத்தினத்தினை முன்னிட்டு கல்முனை பிராந்திய உளநல பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'உலக உளநல தினம் 2023' தொடர்பான செயலமர்வு நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய உளநல பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபலினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உளநலம் என்பது ஓர் உலகளாவிய மனித உரிமை. 'எமது உள்ளம், எமது உரிமைகள்' – எனும் தலைப்பில் கல்முனை பிராந்திய உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஜே.நௌபல் இதன்போது விரிவுரை நிகழ்த்தினார்.



# மான் இறைச்சி சமைத்த 17 வயதுச் சிறுமி கைது!

விலானகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் அலவத்துகொட பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மான் கறி தயாரித்துக்கொண்டிருந்த 17 வயதுடைய சிறுமி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விலானகம பிரதேசத்தில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் மான் ஒன்று கொல்லப்பட்டுள்ளதாகவும், குறித்த வீட்டில் மான் கறி மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் வழங்கிய இரகசிய தகவலின் பேரில் பொலிஸார் இந்தச் சோதனையை மேற்கொண்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட சிறுமி கண்டி நீதிவான் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அவருக்கு 20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.





# கல்முனை சுகாதார சேவைகள் பிரிவால் தொலைபேசி விவரக்கொத்து வெளியீடு

**(எஸ்.அஷ்ரப்கான், நியாஸ் ஆதம்)**

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனையின் சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான தொலைபேசி விவரக்கொத்து நேற்று வெளியிடப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ.அப்துல் வாஜித் மற்றும் பிரிவுத்தலைவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எம்.முஜீப், பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகியோருக்கு தொலைபேசி விவரக்கொத்தினை வழங்கி வைத்தார். கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்கின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எம்.முஜீப் இதற்கான பணியை முன்னெடுத்திருந்தார்.

இந்தத் தொலைபேசி விவரக்கொத்தில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, மாகாண சுகாதார சேவைகள் பணிமனை உட்பட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்கள், நிறுவனத் தலைவர்கள், உத்தியோகத்தர்களது தொடர்பு இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பித்தக்கது.

முக்கியமான தகவல்களை உள்ளடக்கி அழகிய முறையில் வடிவமைத்து தயாரிக்கப்பட்ட தொலைபேசி விவரக்கொத்தைகல்முனை சுகாதார சேவைகள் பணிமனை முதல்முறையாக வெளியிட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

# நாணய நிதிய பிரதிநிதிகள் குழு அடுத்த வாரம் நாட்டிற்கு வருகை

சர்வதேச நாணய நிதியத்தின் வருடாந்த மாநாடு மொரோக்கோவின் நகரில் இன்று இரண்டாவது நாளாகவும் இடம்பெறுகின்றது.

இந்த மாநாடு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மாநாட்டில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழு பங்கேற்றுள்ளது.

இதனிடையே, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்த வாரம் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கடன் வசதியின் இரண்டாம் தவணைக் கொடுப்பனவு தொடர்பில் மேலும் கலந்துரையாடுவதற்காக அவர்கள் நாட்டிற்கு வருகை தரவுள்ளனர் என நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

# நாகை - காங்கேசன் பயணிகள் கட்டணம் குறைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை

**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

நாகப்பட்டினத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்குச் செல்ல ஒரு நபருக்கு இந்திய நாணயத்தில் ரூ. 7,670 கட்டணம் என்பது அதிகமாக இருக்கிறது இந்த கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று நாகப்பட்டினம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஜி.கே. நிஜாமுதீன் தெரிவித்தார். நாகையிலிருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து இன்று 10ஆம் திகதி தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்த நிகழ்ச்சி நாளை மறு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக துறைமுக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் இதற்கான விவரமான காரணம் எதையும் அதிகாரிகள் கூறவில்லை.

நாகையில் இருந்து இலங்கை செல்ல அறவிடப்படும் கட்டணம் அதிகம் என சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் எம்.ஜி.கே. நிஜாமுதீன் கண்டனம் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து நாகப்பட்டினம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஜி.கே. நிஜாமுதீன் வெளியிட்ட செய்தி குறிப்பில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு செல்ல இந்திய அரசு கப்பல் போக்குவரத்தை தொடங்க உள்ளது. இலங்கை சென்று வர, 40 கிலோ உடைமைகள் எடுத்துச் செல்ல அனுமதியுடன் பயணக் கட்டணம் ரூ. 15 ஆயிரம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஆனால், சென்னையில் இருந்து இலங்கைக்கு ஏர் இந்தியா, ஸ்பைஸ் ஜெட் விமானங்களில் 42 கிலோ உடமையுடன் பயணம் செய்ய கட்டணம் உத்தேசமாக ரூ. 14,500 மட்டுமே (20 நாட்களுக்கு முன் முன்பதிவு செய்தால்). எனவே, மத்திய அரசு நாகை – காங் கேசன் துறைக்கான பயணிகள் கப்பல் போக்குவரத்து கட்டணத்தை குறைக்க வேண்டும். என தெரிவித்துள்ளார்.





# சர்வதேச அபாகஸ் போட்டியில் முதலாமிடம் பெற்ற நாவிதன்வெளி மாணவிக்கு பாராட்டு!

சம்மாந்துறை கல்வி வலய நாவிதன் வெளி சாளம்பைக்கேணி அஸ் – சிராஜ் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) தரம் 09இல் கல்வி பயிலும் மாணவி கால்தீன் பாத்திமா லனா சர்வதேச அபாகஸ் போட்டியில் முதலிடம் பெற்றமையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று நேற்று பாடசாலை அதிபர் எஸ்.எம்.எம். யூசுப் தலைமையில் நடைபெற்றது.

அல் – மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் "திறமையானவர்களை தேடி வாழ்த்துதல்" வேலைத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல்– மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சர்வதேச சாதனை மாணவி லானாவை பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம், பதக்கம், சான்றிதழ், பரிசில்கள் போன்றன வழங்கி கௌரவித்தார்.

நகருக்கு தொலைவில் உள்ள கிராமத்தவர்கள் சாதிக்க தகுதியற்றவர்கள் என்ற சிந்தனையை உடைத்து, சர்வதேச அரங்கில் தனது ஊருக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்த மாணவியை கிழக்கு மண்ணின் மகளாக போற்றி கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகிறார் எனவும், இதுபோன்ற பல சாதனையாளர்களை ஆசிரியர்கள் இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் அடையாளப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும், சாதனையாளர்களை தூக்கிவிட எப்போதும் மீஸான் பௌண்டஷன் தயாராக இருப்பதாகவும், சாதனையாளர்களுக்கு ஒழுக்கம் கட்டாயம் அவசியமாக இருப்பதாகவும் இங்கு உரை நிகழ்த்திய கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், அல் – மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர் தெரிவித்தார். இந்நிகழ்வில் அல் – மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா பிரதிப் பொது செயலாளர் டப்லியூ. ஷவ்தப் உஸைம் , விருதுகள் மற்றும் திறமையானவர்களை தேடி வாழ்த்துதல் பிரிவின் பணிப்பாளர் ஜே.எம். கஸான், அல் – மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா இளைஞர் பிரிவின் நிர்வாகிகளான ஜே.எம். பாஸித், கே.எம். ருஸ்தி, பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாத்திமா லானாவின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பாலமுனையில் ஆபத்தான நிலையில் உள்ள இரு மரங்களை வெட்டி அகற்றக் கோரிக்கை

(எம்.ஏ.றமீஸ்)




பாலமுனை பிரதான வீதி அருகில் காய்ந்து இறக்கும் நிலையில் உள்ள இரு பெரும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்துமாறு பல முறை கோரிக்கைகள் விடுத்த போதிலும் இதுவரை அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருப்பது தமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய காரியாலயத்திற்கு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பல முறைகள் இவ்விடயம் தொடர்பில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இம்மரங்கள் இதுவரை வெட்டப்பட்டு அப்புறப் படுத்தப் படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளின் பிரதான வீதிகளில் இருந்த பெரு மரங்கள் வீழ்ந்து உயிர்ப்பலி உள்ளிட்ட பல்வேறான சேதங்கள் இடம்பெற்று வரும் இக்காலப் பகுதியில், கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக பாலமுனை பிரதான வீதியின் அருகில் விசாலமாய் வளர்ந்து தற்போது இலைகள் கொட்டப்பட்டு இறக்கும் நிலையில காட்சி தரும் இப்பெரு மரங்களின் வேர்கள் வியாபித்து வளர்ந்துள்ளதனால் இதற்கு அருகில் உள்ள கட்டடங்கள் சிலவற்றின் பாகங்களுக்கு சேதம் ஏற்பட்டு வருவதாகவும் அதன் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சீரற்ற காலநிலை காரணமாக பாலமுனையினை அண்டிய ஒலுவில் பிரதேசத்தில் மின்னல் தாக்கத்தின் மூலம் ஒருவர் மரணித்தமையுடன் மூவர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இப்பகுதியில் மாலை வேளையில் பலத்த காற்று வீசி வருவதனால் இந்தப் பெரு மரங்களால் இன்னொரு இயற்கை அனர்த்தம் ஏற்பட வாய்ப்புண்டு என்று சுட்டப்படுகின்றது.ஆகையால் இவற்றை வெட்டி அகற்றி, மக்கள் நலனில் அக்கறை கொள்ளுமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட தாப்பினருக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.



# மண்முனை வடக்குப்பிரதேச செயலக பிரிவில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் சேவையைப் பாராட்டும் விழா

(பழுவூரான்)

மண்முனை வடக்குப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டும் முகமாக சர்வதேச ஆசிரியர் தின விழா மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு கல்வி வலய முன்பிள்ளைப் பருவ உதவி கல்விப் பணிப்பாளர் முத்துராஜா புவிராஜசிங்கம் ஓய்வு பெற்றுச் செல்வதனால் முன்பள்ளி ஆசிரியர்களினால் இதன்போது நினைவுச்சின்னங்கள் வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

5 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய மண்முனை வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த 150 க்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் இதன்போது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் 30 வருட சேவையைப் பூர்த்திசெய்து 60 வயதைக் கடந்து ஓய்வுபெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நினைவுக் கேடயமும் வழங்கப்பட்டதுடன், முன்பள்ளி ஆசிரியர்களினால் நடனம் மற்றும் வில்லுப்பாட்டு என்பன அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வின் போது மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர்களான சியாஹுல் ஹக், திருமதி தட்சண்யா பிரசாந்தன், திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிரணவசோதி, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கணேசமூர்த்தி, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் பரமலிங்கம், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி இணைப்பாளர் வீ.முரளிதரன், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் கே.ராஜன், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.மேகராஜா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

"இவ் உலகில் சிறந்த பிரஜைகளை செதுக்கும் ஆசிரியர்களின் சேவையானது போற்றத்தக்கது" எனும் தொனிப்பொருளில் இவ் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.









# சில அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சக்தி வியூகம்

வரவு – செலவுத் திட்டத்தின் சில அமைச்சுக்கள் மீதான நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடிப்பதற்கான முயற்சியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஈடுபடும் எனத் தெரியவருகின்றது.

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதீட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார்.அதன்பின்னர் நவம்பர் 14 ஆம் திகதி 2ஆவம் வாசிப்புமீதான விவாதம் ஆரம்பமாகும். 2ஆம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.




3ஆம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 22 ஆம் திகதி ஆரம்பமாகும். டிசம்பர் 13 ஆம் திகதி பாதீடு மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பாதீட்டு விவாதத்தில் அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் தனித்தனியாக விவாதம் நடத்தப்படும்.

இதன்போது மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டுள்ள அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் எதிரணி வாக்கெடுப் பைகோரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சக்தி அமைச்சு, விவசாய அமைச்சு, சுகாதார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு உட்பட மேலும் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை நிறைவேற்றிக்கொள்வதற்குச் சாதாரண பெரும்பான்மை (113) போதும் என்ற நிலையில், அதற்கான பலம் அரச தரப்பில் உள்ள நிலையில், இப்படியானதொரு முயற்சியில் ஈடுபடுவது ஏற்புடைய நடவடிக்கையா என்ற கேள்வியும் எதிரணி தரப்பில் எழுந்துள்ளது.

ஆனால், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்த இதுவும் ஒரு நகர்வாக இருக்கும் என சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, பாதீட்டு விவாத காலப்பகுதியில் ஆளுங்கட்சியினரை கொழும்பிலேயே இருப்பதற்கான ஆலோசனை ஆளுந்தரப்பில் இருந்து விடுக்கப்படவுள்ளது.

# உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு இல்லங்கள் பயனாளிகளுக்கு கையளிப்பு







(நூருல் /ஹதா உமர்)

உலகக் குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான மானிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு , பூர்த்தியாக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அம்பாறை மாவட்ட முகாமையாளர் ஏ.பி. இராங்கனியும், விசேட அதிதிகளாக சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃப்பிகா, தேசிய வீடமைப்பு அதிகார சபை பொறியியலாளர் ஏ.சி.எம்.பாஹிம், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.நளீர், வீடமைப்பு உத்தியோகத்தர் எம்.எம். எம்.முஸாக்கீர், கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# இஸ்ரேலின் பதிலடியால் அதிர்கிறது காஸா முனை

## தாக்குதல் தொடர்ந்தால் பணயக் கைதிகளை கொலை செய்வதை நேரலையில் ஒளிபரப்பு செய்வோம் என ஹமாஸ் கடும் எச்சரிக்கை

ஹமாஸ் தீவிரவாதிகள் ஆக்கிரமித்திருந்த காஸா எல்லைப்பகுதிகளை இஸ்ரேல் மீண்டும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இதனைத் தொடர்ந்து காஸா முனை மீது இஸ்ரேல் சரமாரி தாக்குதல் தொடங்கியது. போர் விமானங்கள் மூலம் காஸா முனையில் இஸ்ரேல் குண்டு மழை பொழிந்து வருகிறது.

இந்த சூழ்நிலையில் மேற்குகரையில் இருந்தும் இஸ்ரேல் மீது பாலஸ்தீனியர்கள் தாக்குதல் நடத்தினர். இதற்கு இஸ்ரேல் பதிலடி கொடுக்கிறது.

காஸா மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் பிடித்து வைத்திருக்கும் இஸ்ரேல் பணயக் கைதிகளைக் கொலை செய்வோம் என ஹமாஸ் தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னெச்சரிக்கை எதுவும் கொடுக்காமல் காஸாவில் அப்பாவி பொது மக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பணயக் கைதிகளை கொலை செய்வோம். மேலும், பணயக் கொலை செய்வதை டிவி நேரலையில் ஒளிபரப்பு செய்வோம் என்றும் ஹமாஸ் தீவிரவாத அமைப்பு இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதற்கிடையில், காஸா முனையில் ஹமாஸ் தீவிரவாதிகள் 1,500 பேர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும், இஸ்ரேல் இராணுவம் கூறுகையில், 'எல்லையில் ஓரளவு கட்டுப்பாட்டை மீட்டு கொண்டு வந்து உள்ளோம். எனினும் ஊடுருவல்கள் தொடர்ந்து நடக்கின்றன' என்றது.

காஸா முனையில் நேற்று இரவு முழுவதும் இஸ்ரேல் குண்டு மழை பொழிந்துள்ளது. 200க்கும் அதிகமான இடங்களில் இஸ்ரேல் விமானப்படை குண்டு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளது. ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்ட இடங்கள், இராணுவ டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் நிறுவப்பட்ட இடங்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. காஸாவுடனான எல்லைப்பகுதிகளை இஸ்ரேல் இராணுவம் மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.

காஸாவில் இருந்து ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேல் எல்லைக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலை தொடர்ந்து பதில் தாக்குதல் நடத்திய இஸ்ரேல் இராணுவம், ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காஸா எல்லையோரப் பகுதிகளை மீண்டும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போர் இன்று 4 ஆவது நாளாக நடைபெற்று வருகிறது. இந்த போரில் பலியானோர் எண்ணிக்கை 1,600 ஆக அதிகரித்துள்ளது. இஸ்ரேலில் ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 900 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 700 பேர் வரை உயிரிழந்தனர் என முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்நிலையில், இஸ்ரேலில் இருந்து காஸா முனைக்கு வழங்கப்பட்டு வந்த குடிதண்ணீர், மின்சாரம், எரிபொருள், உணவு விநியோகம் போன்றவை நிறுத்தப்பட்டுள்ளன. காஸா முனை முழுவதும் முடக்கப்படுவதாக இஸ்ரேல் அதிரடியாக அறிவித்துள்ளது.

"போரை நாங்கள் தொடங்கவில்லை. ஆனால் போரை முடித்து வைப்போம்" என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், "இஸ்ரேல் போரில் உள்ளது. இந்த போரில் எங்களுக்கு விருப்பமில்லை. ஆனால், மிகவும் கொடூரமான முறையில் இந்தப் போருக்குத் தள்ளப்பட்டோம். இஸ்ரேல் இந்தப் போரைத் தொடங்கவில்லை, ஆனால் போரை முடித்துவைக்கும். எங்களைத் தாக்கி ஹமாஸ் வரலாற்றுத் தவறு செய்துவிட்டது. தாக்குதல் நடத்தியதற்கான விலையை நாங்கள் நிர்ணயிப்போம். அந்த விலை ஹமாஸ் மற்றும் இஸ்ரேலின் எதிரிகளால் பல ஆண்டுகளுக்கு நினைவு கொள்ளப்படும். ஹமாஸ் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள். இந்த போரில் இஸ்ரேல் வெற்றிபெறும்" – என்றார்.

# ஐந்து மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்

## நவம்பரில் நடக்கின்றது

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், தெலுங்கானா, மிசோரம் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல், நவம்பர் 7இல் தொடங்கி 30 வரை நடக்கிறது. இவற்றில் பதிவாகும் வாக்குகள் டிசம்பர் 3 இல் எண்ணப்பட்டு, அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் நேற்று அறிவித்தது.

மிகவும் பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட ஐந்து மாநில சட்டசபை தேர்தலுக்கான திகதிகளை, தலைமை தேர்தல் ஆணை யாளர் ராஜிவ் குமார், புதுடில்லியில் நேற்று அறிவித்தார். புதுடில்லியில் நடந்த இதற்கான செய்தியாளர்கள் சந்திப்பில் அவர்கூறியதாவது:-

சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா மற்றும் மிசோரம் ஆகிய ஐந்து மாநிலங்களுக் கான சட்டசபை தேர்தல், நவம்பர் 7இல் தொடங்கி 30 வரை நடக்கிறது.

மத்திய பிரதேசத்துக்கு நவம்பர் 17 இலும், ராஜஸ்தானில் நவம்பர் 23 இலும், தெலுங்கானாவில் நவம்பர் 30 இலும், மிசோரமில், நவம்பர் 7இலும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடத்தப்பட உள்ளது. சத்தீஸ்கரில் மட்டும், நவம்பர் 7 மற்றும் 17 இல், இரு கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட உள்ளது. நவம்பர் 7ஆம் திகதி, 20 தொகுதிகளிலும், 17 ஆம் தேதி, 70 தொகுதிகளிலும் வாக்குப் ப்பதிவு நடக்க உள்ளது.







இந்த ஐந்து மாநிலங்களிலும், 8.20 கோடி ஆண் வாக்காளர்களும், 7.80 கோடி பெண் வாக்காளர்களுமாகச் சேர்த்து மொத்தம், 16 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். இதில், 60.20 லட்சம் பேர் முதன்முறையாக வாக்களிக்க உள்ளனர்.

இந்த ஐந்து மாநிலங்களிலும், 1.77 லட்சம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. இதில், 1.01 லட்சம் வாக்குச் சாவடிகளில், வாக்களிக்கும் நடை முறையை நேரலையில் ஒளி பரப்பும், 'வெப் காஸ்டிங்' வசதி செய்யப்பட உள் ளது. மொத்தம், 8,000 வாக்குச்சாவடி கள் பெண்களால் நிர்வகிக்கப்பட உள்ளன.

இந்த தேர்தலில், வாக்காளர்களை கவர்வதற்காக பரிசுப் பொருள்கள் மற் றும் பணம் கொடுக்கப்படுவதைத் தடுப்பதற்காக, முதன்முறையாக தேர்தல் பறிமுதல் மேலாண்மை நடைமுறை அறிமுகப்படுத்தப்பட உள்ளது. வாக் காளர்களுக்கு பணம் கொடுப்பதை தவிர்ப்பதற்காக, சந்தேகத்துக்கு இட மான, 'ஒன்லைன்' பணப் பரிவர்த்தனை கள் தீவிரமாக கண்காணிக்கப்படும். பண பலத்தை பயன்படுத்தி தேர்தலை சந்திக்க முயற்சிப்போர் மீது, கடும் நடவடிக்கை பாயும். - இவ்வாறு அவர் கூறினார்.

செய்தியாளர்கள் சந்திப்பின் போது, 'ஜம்மு - காஷ்மீர் சட்ட சபை தேர்தல் எப்போது நடக்கும்?' என, நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு தலைமை தேர்தல் கமிஷனர் ராஜிவ் குமார் பதில் அளிக்கையில், "ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைவரத்தை கருத்தில் வைத்து, தேர்தல் திகதி அறிவிக்கப்படும். தேர்தல் நடத்துவதற்கான சூழல் உருவாகிவிட்டதாக தேர்தல் கமிஷன் கருதும் போது அறிவிப்பு வெளியாகும்," எனத் தெரிவித்தார்.

# ஓட்டோ - லொறி மோதி கோர விபத்து குஜராத்தில் ஆறு பேர் பரிதாபச் சாவு!

ஓட்டோ மீது லொறி மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த குழந்தை உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் தஹோத் மாவட்டத்தின் தாஹோத் - அலிராஜ்பூர் நெடுஞ் சாலையில் இந்த விபத்து சம்பவம் நடந்துள்ளது. ஒரே குடும்பத்தை சேர்ந்த குழந்தை உட்பட 6 பேர் ஒட்டோவில் சென்றனர். அவர்கள் பயணித்த ஓட்டோ மீது லொறி மோதியது. லொறி மோதியதில் ஓட்டோ நொறுங்கியது.

இந்த கோர விபத்தில் சிக்கி ஓட் டோவில் பயணித்த 6 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் விபத்தில் சிக்கி படுகாயங்களுடன் உயிருக்கு போராடிய ஓட்டோ டிரைவரை அங்குள்ள பொதுமக்கள் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இந்த விபத்து குறித்து பொலிஸுக்கும் தகவல் தெரிவித்தனர். தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விபத்துக் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.